

சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்ற தொகுதி, குன்னூர் ஒன்றியம் பர்லியார், வண்டிச்சோலை, பேரட்டி மற்றும் எடப்பள்ளி ஊராட்சியில் ரூ.312.73 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை நேரில் ஆய்வு செய்தார். மேலும் அப்பகுதி மக்களின் குறைகளை கேட்டு அறிந்து மக்களிடம் மனுக்கள் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி.உமா மகேஸ்வரி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷன் குமார், உட்பட அரசுத்துறை அலுவலர்கள், தி.மு.க. மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர் லட்சுமி, குன்னூர் ஒன்றிய கழக செயலாளர் பிரேம்குமார், பொதுக்குழு உறுப்பினர் கா.செல்வம், ஒய்.ஜெ.காளிதாசன், ஒன்றிய கவுன்சிலர் கருணாநிதி, பர்லியார் ஊராட்சி தலைவர் சுசீலா, துணைத் தலைவர் தீனதாயலன், பேரட்டி ஊராட்சி தலைவர் ஜெகதீசன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நேற்று (09.09.2023) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கொளப்பாக்கத்தில் கடந்த ஒரு வருட காலமாக மேற்கொள்ளப்பட்ட வந்த வெள்ளத்தடுப்பு பணிகளை குறும்படமாக தயாரித்த அதனை நேற்று குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வெளியிட்டார்.

### குவைத்தில் ரூ 60 ஆயிரம் சம்பளம் என்ற போலி அறிவிப்பை நம்பி சென்று சித்திரவதைக்கு ஆளான

# 19 தமிழர்களைதமிழக அரசு இந்திய தூதரகம் மூலம் மீட்பு!

## சென்னைக்கு வந்தவர்களை அமைச்சர் செஞ்சிமஸ்தான் வரவேற்றார்

சென்னை செப்.10-

குவைத்தில் ரூபாய் 60 ஆயிரம் சம்பளம் உணவு மற்றும் தங்குமிடம் இலவசம் என்ற போலி அறிவிப்பை நம்பி வேலைக்கு சென்ற 19 தமிழக இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர் தமிழக அரசின் நடவடிக்கையால் அவர்கள் மீட்கப்பட்டு சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சென்னையில் உள்ள தனியார் டிராவல்ஸ் நிறுவனம் ஒன்று கடந்த ஆண்டு வெளிநாட்டு வேலைக்கு இளைஞர்கள் தேவை மாதம் ரூபாய் 60 ஆயிரம் வரை சம்பளம், உணவு, தங்குமிடம் இலவசம் மற்றும் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று அறிவிப்பு செய்தனர். இதை நம்பி தமிழ்நாட்டில் உள்ள அரியலூர், திருவாரூர், தஞ்சாவூர் ,பெரம்பலூர், கடலூர் ,ராமநாதபுரம் ,சிவகங்கை, மதுரை ,தென்காசி, கள்ளக்குறிச்சி, உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 19 இளைஞர்கள் சம்பந்தப்பட்ட தனியார் டிராவல்ஸ் நிறுவனத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்தனர். இதற்காக அந்நிறுவனம் அந்த இளைஞர்களிடம் ரூபாய் 1 லட்சம் முதல் 1.50 லட்சம் வரை வசூலித்து கடந்த ஆண்டு மே மாதம் சென்னையில் இருந்து விமான மூலம் குவைத்துக்கு அனுப்பி வைத்தனர்.

குவைத் விமான நிலையத்தில் சில ஏஜென்ட்கள் இவர்களை வரவேற்று சில நிறுவனங்களில் பணியில் அமர்த்தினர் அங்கு இவர்களுக்கு பேசியபடி சம்பளம் கொடுக்காமல் ரூபாய் 18000 மட்டுமே மாத சம்பளமாக கொடுத்துள்ளனர். இதனால் சொந்த ஊருக்கு திரும்ப நினைத்தவர்களை சித்திரவதை செய்தனர். இதை அடுத்து அந்த இளைஞர்கள் குவைத்தில் உள்ள இந்திய தூதரகம் அலுவலகத்தில் புகார் செய்தனர் அதோடு தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கும் புகார் அனுப்பி வைத்தனர் .இதையடுத்து தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின் பெயரில் தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலத்துறை குவைத்தில் உள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து 19 தமிழக இளைஞர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன்படி மீட்கப்பட்ட 19 தமிழக இளைஞர்களும் இந்திய தூதரகம் உதவியுடன் ஏர் இந்தியா பயணிகள் விமான மூலம் நேற்று முன்தினம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சென்னை விமான நிலையத்தில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்களை வரவேற்றார் இதை அடுத்து அந்த இளைஞர்கள் அனைவரும் அவர்களுடைய சொந்த ஊருக்கு தமிழக அரசு சார்பில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்

# எழும்பூர் வடக்கு: 78வது வட்ட பொருளாளர் த.பொற்செழியன் இல்ல மணவிழா !

## மேயர் பிரியா - தாயகம் கவி எம்.எல்.ஏ, - இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, செப்.10

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி 78வது வட்ட பொருளாளர் த.பொற்செழியன், அன்புச்செல்வி ஆகியோரின் புதல்வி பொ. ரேவதிக்கும் டி. சேகர்,எஸ். கமலா ஆகியரின் புதல்வர் எஸ். வைத்தியலிங்கசெல்வம் ஆகியோரின் மணவிழா மற்றும் வரவேற்பு இன்று (10.9.2023 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணிக்குமேல் பெரம்பூர் பேரக்ஸ் ரோட்டில் அமைந்துள்ள லக்ஷ்மி மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு மாவட்டச்செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை ஏற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

இதில் மேயர் பிரியா ராஜன்,எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன்,திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி,எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். ரவிச்சந்திரன்,மாவட்ட அவை தலைவர் கோ.ஏகப்பன், மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் பிரசை. ஜி. தாமோதரன்,

மாநில ஊடகவியல் துறை இணை செயலாளர் தமிழன் பிரசன்னா, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், மாநில அயலக அணி மாவட்ட துணை செயலாளர் பரிதி இளம்சுருதி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் க.வினோத், ஷங்கர்நானா, மகளிர் தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் ராஜேஸ்வரி ’ரீதர்,வட்ட கழக செயலாளர் செயலாளர்கள் சு.மனோகர்,நா. பாலு மற்றும் அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, பகுதி வட்ட கழக, முன்னாள் நிர்வாகிகள் உள்ளிட்டோர் வாழ்த்துகின்றனர்.



குவைத்தில் ரூ 60 ஆயிரம் சம்பளம் என்ற போலி அறிவிப்பை நம்பி சென்று சித்திரவதைக்கு ஆளான 19 தமிழர்களைதமிழக அரசு இந்திய தூதரகம் மூலம் மீட்பு. சென்னைக்கு வந்தவர்களை அமைச்சர் செஞ்சிமஸ்தான் வரவேற்று சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார்.

### தலைமை: மாதவரம் எஸ்.சுதர்சனம் எல்.எல்.ஏ.! மாதவரம் வடக்குப் பகுதி துணைச் செயலாளர்

# ஆ.உதயா ராஜேந்திரன் எம்.சி. - இரா.ஆனந்தா இல்ல விழா!

## மேயர் ஆர்.பிரியா -கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. - துணை மேயர் மு.மகேஷ்குமார் - தி.மு.தனியரசு பங்கேற்பு!

சென்னை, செப்.10-

மாதவரம் வடக்கு பகுதி துணைச் செயலாளரும் 16 வது மாமன்ற உறுப்பினருமான ஆ.உதயா ராஜேந்திரன் - இரா.ஆனந்தா (எ) சுதா ஆகியோரின் மழலைகள் இரா.ஆரியன் - இரா. ஆதித்யா ஆகியோரின் காதணி விழா இன்று (10-9-2023, ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் மணலி புதுநகரில் அமைந்துள்ள அய்யா கோவில் அருகில் உள்ள மைதானத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மாவட்ட கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

வட்ட செயலாளர் இ. கண்ணப்பன் வரவேற்புரையாற்றுகிறார்.

அறிவழகி பாலகிருஷ்ணன், புழல் எம்.நாராயணன், ஏ.வி.ஆறுமுகம், எஸ். நந்தகோபால், ஜி.துக்காராம், வை.ம.அருள்தாசன், எஸ்.அனந்தராமன், பே.சரவணன், மீ.வே.கருணாகரன், மோரை தயாளன், க.காசிநாதன், நந்தினி சண்முகம், ஆ.தீர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ் குமார், கே.பி. சங்கர் எம். எல்.ஏ., தி.மு. தனியரசு எம்.சி. ஆகியோர் சிறப்பாளகராக கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

இவ்விழாவில் வி.திராவிடவீரன், க.சிவசங்கர், கௌரிசங்கர்லால், ஆர். முரளி, பி. தரணி, பா.சந்திரன், நா.மோகன் குமார், கு. செல்வம், வி.கார்த்திகேயன், பூ.நிர்மல் குமார், ஜிம் ராஜா, இ.அருள், இ.வெங்கடேசன், என்.பரசுராமன், எம்.புவனேஸ்வரி, மகேஷ் குமார், இ.குமரவேல், கே.ஏ.ரமேஷ், சி.முத்தையா, வி.மாரி, கே.ராஜ் மோகன், சி. உத்திராஜ், ஏ. ராஜேந்திரன், பி.டி.ரவிச்சந்திரன், அ.பக்தவச்சலம், க.கண்ணன், சு. மனோகரன், ஏன்.நல்லமுத்து, ரா. மோகன கிருஷ்ணன், டி. எஸ்.ஜனார்த்தனன்,

நிர்வாக இயக்குனர் எஸ். உமா மகேஸ்வரன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், எம்.ஆனந்தன், ஜெய் மதன், என்.பரந்தாமன், டி.ஏ. ராஜ், இரா.முருகேசன், பி. சாந்தி, போ.தமிழரசன் என்கிற தம்பியா, ஏ.சந்திரன், துரைசாமி, கே.பி.சொக்கலிங்கம், ஏழுமலை, கார்த்திகேயன், குணசுந்தரி, கனிமொழி சுரேஷ், ஆஸ்ன மிர்சியா, ஆர்.ஜெய்சங்கர், எம்.ஸ்ரீதரன், ஆர்.ஜி. ராஜேஷ், பி.எஸ். சந்துரு, வீரா, குப்பன். எஸ்.ஏ.சீனிவாசன், ஆர்.பாபு, வி.தியாகராஜன், ஆர்.டி. மதன்குமார், ஆர்.ராஜ்குமார், கோ. தங்கராஜ், ஏ.முகமது வசீம், இ.எம்.மனோகரன், வி. மணிகண்டன், பா.கோபிநாத், எஸ்.உதயகுமார், பி. சரவணன், கேபிள் தா. கணேசன், ஜிகே இனியன், சீனிவாசன், மோரை ம. சதீஷ்குமார், பாரதி சரவணன், கே.தனசேகரன், எஸ். சிவக்குமார். தா.ஜெய்சங்கர், பி.ஜெயராஜ், ஆர்.நாகராஜ், எஸ்.டி.அமிர்தராஜ், ச. இளஞ்செழியன், த.சுதர்சன், ஜி.சேகர், கருணாகரன், கே.டி.எஸ்.நேரு காந்தி, ஜே.பபின் சிஸ், க.அங்குசாமி, கே.கருணாகரன், கா. தாமரைச்செல்வன், சூ. மனோகரன், ஏ.நல்லமுத்து, ரா.மோகன கிருஷ்ணன், டி.எஸ்.ஜனார்த்தனன் மற்றும் மாதவரம் வடக்கு பகுதி சார்ந்த கழகத் தோழர்களும், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் 16 வது வட்டத்தைச் சார்ந்த கழகத்தின் மூத்த முன்னோடிகளும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

### ரூ.7.50 லட்சம் கோடி மோடி ஆட்சியின் மெகா ஊழல் குறித்து

# பம்மல் வடக்குப் பகுதியில் பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள்!

## பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் தலைமையில் கழகத்தினர் வழங்கினர்!

சென்னை, செப். 10-

ஒன்றிய பா.ஜ.க. மோடி ஆட்சியின் ரூ.7 லட்சத்து 50 ஆயிரம் கோடி மெகா ஊழலை பொது மக்களிடம் கொண்டு செல்லும் விதமாக பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் துண்டுப் பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டுன.

பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயகுமார் தலைமையில் தாம்பரம் மாநகர அவைத் தலைவர் - தாம்பரம் துணை மேயர் கோ.காமராஜ், தாம்பரம் மாநகர துணைச் செயலாளர் இரா.நரேஷ்கண்ணா, மாவட்ட கழக பிரதிநிதி எஸ்.கே.நெப்போலியன், பகுதி அவைத் தலைவர் கே.சந்திரன், பகுதி துணைச் செயலாளர்கள் மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா பொருளாளர் ச.பிரபு,

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எல்.பிரபு, தலைமை பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாவட்டப் பிரதிநிதி பா.டில்லி, மாநகரப் பிரதிநிதிகள் இரா.குமரேசன், சி.பார்த்த சாரதி, க. சுந்தரமூர்த்தி, இரா. பாபுஜி, வட்டக் கழகச் செயலாளர்கள் ப.அன்பழகன், க.மோகன், மு.நி. தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம். ஜோசப், மாநகராட்சி மன்ற உறுப்பினர் வாணிஸ்ரீ மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்று பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் வழங்கினர்.



ஒன்றிய மோடி ஆட்சியின் ரூ.7.50 லட்சம் கோடி மெகா ஊழலை பொதுமக்களிடம் கொண்டு செல்லும் விதமாக பம்மல் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் துண்டுப் பிரசுரங்கள் பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார் தலைமையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இதில் தாம்பரம் துணை மேயர் கோ.காமராஜ், இரா.நரேஷ் கண்ணா, எஸ்.கே.நெப்போலியன், கே.சந்திரன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று துண்டுப் பிரசுரங்கள் வழங்கினர்.


